பிப்ரவரி
2020

விண்மீன்.காம்

# நான்காவது வார நடப்பு நிகழ்வுகள்

01 பிப்ரவரி – 07 பிப்ரவரி

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

### 1. 'சம்பிரிதி' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான கூட்டு இராணுவப்பயிற்சியாகும்?



அ. ஜப்பான்


ஆ. இலங்கை

இ. சீனா

**ஈ. வங்கதேசம் ☑**

- 'சம்பிரிதி' என்பது இந்தியாவிற்கும் வங்கதேசத்துக்கும் இடையிலான ஒரு கூட்டு இராணுவப்பயிற்சி ஆகும். இந்தப் பயிற்சியின் ஒன்பதாவது பதிப்பு (SAMPRITI – IX) வரும் பிப்.3–16 வரை மேகாலயாவின் உம்ரோய் நகரத்தில் நடத்தப்படவுள்ளது. இந்தோ–வங்கதேச பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒருபகுதியாக இருக்கும் இந்தப்பயிற்சியை ஆண்டுதோறும் இரு நாடுகளும் மாறி மாறி நடத்திவருகின்றன.
- கடந்த ஆண்டு, இந்தப் பயிற்சி, வங்கதேசத்தின் டாங்கைலில் நடத்தப்பட்டது. பயிற்சியின்போது, ஐ.நா அவையின் சாசனத்தின்படி, இருநாடுகளின் படைகளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்ளும்.

### 2.இந்தியாவின் எந்தத் தலைவருக்கு மரியாதை செலுத்துவதற்காக, இந்தியா, அண்மையில், ஜனவரி 30 அன்று, 'தியாகிகள் நாளை' அனுசரித்தது?



அ. காமராஜர்

ஆ. ஜவஹர்லால் நேரு

**இ. மகாத்மா காந்தி ☑**

ஈ. B R அம்பேத்கர்

- ஒவ்வோர் ஆண்டும் ஜன.30 அன்று நாடு முழுவதும் 'தியாகிகள்' நாள் அனுசரிக்கப்படுகிறது. மகாத்மா காந்தியின் நினைவுநாளை அனுசரிப்பதற்கும், நாட்டிற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த பிற இந்தியர்களின் தியாகங்களுக்கு மரியாதை செலுத்துவதற்காகவும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2020), மகாத்மா காந்தியின் 72ஆவது நினைவுநாளை இந்தியா அனுசரிக்கிறது.
- குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் மற்றும் பாதுகாப்பு சேவைத் தலைவர்கள் உட்பட அனைத்து தேசியத் தலைவர்களும் மகாத்மா காந்தி மற்றும் இந்தியாவின் பிற தியாகிகளுக்கு மரியாதை செலுத்தினர். பகத்சிங், இராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகிய 3 விடுதலைப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும், மார்ச் 23ஆம் தேதியும் 'தியாகிகள் நாளாக' அனுசரிக்கப்படுகிறது.

### 3. 2019–20ஆம் ஆண்டுக்கான PEN கௌரி லங்கேஷ் விருதைப்பெறவுள்ள இந்திய இதழாளர் யார்?



அ. ராவிஷ் குமார் **ஆ. யூசுப் ஜமீல் ☑**

இ. N ராம் ஈ. பிரனாய் ராய்

- மூத்த இந்திய இதழாளர் யூசுப் ஜமீல், 'ஜனநாயகக் கருத்தியலுக்கான 2019-2020ஆம் ஆண்டுக்கான PEN – கௌரி லங்கேஷ் விருது'க்குத் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். கிளர்ச்சிக்காலத்தில் ஜம்மு-காஷ்மீரில் அவராற்றிய புரட்சிகர இதழியல் பணிக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

- PEN இன்டர்நேசனல் என்பது பன்னாட்டு எழுத்தாளர்களின் சங்கமாகும்; இது, கடந்த 1921ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட இதழாளரும் சமூக ஆர்வலருமான கௌரி லங்கேசை போற்றி கௌரவிப்பதற்காக PEN தென்னிந்தியா மற்றும் PEN தில்லி ஆகியவை இணைந்து இந்த விருதை நிறுவியுள்ளன. கௌரி லங்கேஷின் பிறந்தநாளில், துணிச்சலான இதழியல் பணியை மேற்கொள்ளும் ஒரு தனிநபர் அல்லது அமைப்புக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

**4. FICCIஆல் அண்மையில் வெளியிடப்பட்ட பொருளாதார முன்னோட்ட ஆய்வின்படி, 2019-20ஆம் ஆண்டுக்கான சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி கணிப்பு என்ன?**

அ. 5.0 % ☑

ஆ. 5.1 %

இ. 5.2 %

ஈ. 5.3 %

- இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை கூட்டமைப்பு (FICCI) சமீபத்தில் தனது சமீபத்திய பொருளாதார முன்னோட்ட ஆய்வறிக்கையை வெளியிட்டது. இந்த ஆய்வின்படி, 2019-20ஆம் ஆண்டுக்கான சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி கணிப்பு 5.0 % என மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-21ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 5.5% ஆக உயரும் எனவும் அந்த ஆய்வின்வழி தெரியவந்துள்ளது.

- வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் தொழிற்துறைக்கான சராசரி வளர்ச்சி கணிப்பு 2019-20ஆம் ஆண்டில் முறையே 2.6 % மற்றும் 3.5 % என கணிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சேவைத்துறையின் வளர்ச்சி 7.2% ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5. மத்திய மறைமுக வரிகள் & சுங்கங்கள் வாரியத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. பிரணாப் குமார் தாஸ்

ஆ. அஜய் பூஷன் பாண்டே

இ. M அஜித் குமார் ☑

ஈ. அதானு சக்ரவர்த்தி

- பணியாளர்கள், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்ட உத்தரவின்படி, மத்திய மறைமுக வரிகள் & சுங்கங்கள் வாரியத்தின் (CBIC) அடுத்த தலைவராக M அஜித் குமாரை நியமிக்க, அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அறிவிப்பு, 2020 பிப்.1ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ள மத்திய பட்ஜெட்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டுள்ளது.

❖ 1984ஆம் ஆண்டைய இந்திய வருவாய் சேவை அதிகாரியான M அஜித் குமார், தற்போது CBICஇன் உறுப்பினராக உள்ளார். CBICஇன் முந்தைய தலைவராக பிரணாப் குமார் தாஸ் இருந்தார்.

**6.அண்மையில் காலமான அஜ்மல் சுல்தான்புரி, எந்த மொழியில் புகழ்பெற்ற கவிஞராக இருந்தார்?**

அ. ஹிந்தி

**ஆ. உருது ☑**

இ. மராத்தி

ஈ. குஜராத்தி




❖ 97 வயதான அஜ்மல் சுல்தான்புரி, புகழ்பெற்ற உருது மொழிக்கவிஞராவார். அண்மையில் அவர் தனது உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள சுல்தான்பூரில் காலமானார். உருதுக்கவிதைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்ததற்காக, கடந்த 2016 மார்ச் மாதத்தில், உத்தரபிரதேச உருது அகாதமியின் வாழ்நாள் சாதனையாளர் விருதை அவர் பெற்றார். அவரது குறிப்பிடத்தக்க கவிதைகளுள், "கஹான் ஹை மேரா ஹிந்துஸ்தான்" மற்றும் "அகர் மெயின் தேரா ஷாஜகான்" ஆகியவை அடங்கும்.

**7. IMEI ஒதுக்கீட்டை வழங்குவதற்கும் நிர்வகிப்பதற்கும் இந்திய தொலைத்தொடர்புத்துறை சமீபத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது. IMEI என்பது எதைக்குறிக்கிறது?**

அ. Indian Mobile Equipment Identity

**ஆ. International Mobile Equipment Identity ☑**

இ. Indian Multimedia Equipment Identifier

ஈ. International Multimedia Equipment Identifier




❖ IMEI (International Mobile Equipment Identity) எண் என்பது அலைபேசிகளின் தனித்துவமான 15 இலக்க வரிசை எண்ணாகும். இந்த எண், GSMA மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தியாவில், GSMAஇன் அதிகாரப்பூர்வ அமைப்பாக Mobile Standards Alliance of India (MSAI) உள்ளது.

❖ அண்மையில், இந்தியாவில் உள்ள அலைபேசிகளுக்கு IMEI எண்கள் வழங்குவது மற்றும் அதனை நிர்வகிப்பதற்கான உரிமையை தனியார் நிறுவனமான MSAIஇடமிருந்து இந்திய தொலைத்தொடர்புத் துறை திரும்பப்பெற்றுள்ளது. இந்திய தொலைத்தொடர்புத் துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு உருவாக்கிய புதிய, 'இந்திய போலிச்சாதன கட்டுப்பாடு (Indian Counterfeited Device Restriction – ICDR) அமைப்பு', மத்திய கருவி அடையாள பதிவேட்டின் (Central Equipment Identity Register – CEIR) வலைத்தளத்தில் முன்னோட்ட அடிப்படையில் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

**8.எந்நிறுவனத்துடன் இணைந்து, காதி மற்றும் கிராமப்புற தொழிற்துறை ஆணையமானது, 'காதி கைக் கடிகாரங்களை' அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ. பாசில்

**ஆ. டைட்டன் ☑**

இ. டைமக்ஸ்

ஈ. கேசியோ



- காதி மற்றும் கிராமப்புற தொழிற்துறை ஆணையம் மற்றும் முன்னணி இந்திய நுகர்வோர் பொருட்கள் நிறுவனமான டைட்டனின் கூட்டுமுயற்சியின் ஒருபகுதியாக தயாரிக்கப்பட்ட தனித்துவமான காதி கைக்கடிகாரங்களை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அண்மையில் அறிமுகம்செய்துவைத்தார்.

- வாங்குவோரை ஈர்ப்பதற்காக பன்னாட்டு வானூர்தி நிலையங்களில் இந்தக் கைக்கடிகாரங்களை காட்சிப்படுத்தவும் அமைச்சர் பரிந்துரைத்தார். இந்தக் கைக்கடிகாரத்தில், 'இராட்டை' இடம்பெற்றுள்ளது. KVICஇன் அறிவிப்பின்படி, 10 கைக்கடிகாரங்களை உற்பத்திசெய்ய 1 ச.மீ காதி துணி பயன்படுத்தப்படு –கிறது. மேலும் இதுபோன்ற 1000 கடிகாரங்கள் விற்பனைசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9.நேபாளத்துக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. தரஞ்சித் சிங் சந்து

ஆ. விஜய் கோகலே

**இ. வினய் மோகன் குவாத்ரா ☑**

ஈ. அஜித் குமார்



- வெளியுறவு அமைச்சகத்தின் அண்மைய அறிவிப்பின்படி, மூத்த தூதரான வினய் மோகன் குவாத்ரா சமீபத்தில், நேபாளத்துக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டார். 1988ஆம் ஆண்டைய இந்திய வெளியுறவு சேவை (IFS) அதிகாரியான வினய் மோகன் குவத்ரா, தற்போது பாரிசுக்கான இந்திய தூதராக பணியாற்றி வருகிறார்.

- இவருக்கு முன்பு, மூப்போய்வு பெற்ற மஞ்சீவ் சிங் பூரி, நேபாளத்துக்கான இந்தியாவின் தூதராக இருந்தார். ஜெனீவாவில் உள்ள நிரந்தர இந்தியா திட்டம், நேபாளத்தில் உள்ள SAARC செயலகம், வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம் உள்ளிட்ட பல அமைப்புகளில் வினய் மோகன் குவாத்ரா முக்கியப்பங்கு வகித்துள்ளார்.

**10.ஓர் அண்மைய அறிக்கையின்படி, உலகளவில் முதல் 30 இடங்களைப் பெற்ற மதியுரையகங்களின் பட்டியலில் இடம்பெற்ற இந்திய மதியுரைகம் எது?**

அ. பார்வையாளர் ஆராய்ச்சி அறக்கட்டளை (ORF) ☑

ஆ. NITI ஆயோக்

இ. குடிமக்கள் சமூக மையம் (CCS)

ஈ. ஆற்றல் மற்றும் வள நிறுவனம் (TERI)

- கடந்த 2019ஆம் ஆண்டின், 'Global Go To Think Tank Index Report'இன்படி, இந்திய மதியுரையகமான Observer Research Foundation, உலகளவில் முதல் 30 இடங்களைப் பெற்ற மதியுரையகங்களின் பட்டியலில் 27ஆவது இடத்தில் உள்ளது. இந்த அறிக்கையை பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் லாடர் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

- இதில், அமெரிக்காவின் சர்வதேச அமைதிக்கான, 'Carnegie Endowment' முதலிடம் பிடித்துள்ளது. கடந்த ஆண்டு பட்டியலில், ORF, 118ஆவது இடத்தில் இருந்தது. ORFஆல் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்ட, 'ரைசினா உரையாடல்' உலகளவில் ஏழாவது சிறந்த மாநாடாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2020 ஜனவரி 31 அன்று, தேசிய புள்ளிவிவர அலுவலகம் வெளியிட்ட அறிக்கையின்படி, 2018–19ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 6.8 %

ஆ. 6.4 %

இ. 6.2 %

ஈ. 6.1 % ☑




❖ கடந்த மூன்றாண்டுகளுக்கான இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை ஜன.31 அன்று தேசிய புள்ளிவிவர அலுவலகம் வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தை, கடந்த 2018 மே மாதத்தில் மதிப்பிடப்பட்ட 6.8%'க்கு எதிராக 6.1% என அவ்வலுவலகம் நிர்ணயித்துள்ளது.

❖ முதனிலைத் தொழிற்துறையான வேளாண்மை மற்றும் சுரங்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தொய்வும் இரண்டாம் நிலை தொழிற்துறையின் உற்பத்தி நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுணக்கமுமே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தில் கீழ்நோக்கிய திருத்தத்திற்கு முக்கிய காரணம் என்று தேசிய புள்ளிவிவர அலுவலகம் தெரிவித்துள்ளது. இது, 2017–18ஆம் ஆண்டின் வளர்ச்சி விகிதத்தை 7% என நிர்ணயித்துள்ளது. மேலும், வளர்ச்சி விகிதம், 2019–20ஆம் ஆண்டில் 5 சதவீதமாக இருக்கும் எனவும் அவ்வலுவலகம் மதிப்பிட்டுள்ளது.

**2.படைப்பாற்றலை மையமாகக்கொண்ட, 'Tangi – டாங்கி' என்ற குறுங்காணொலி தயாரிக்கும் (short – video making) செயலியை அறிமுகப்படுத்தியுள்ள சர்வதேச தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ. மைக்ரோசாப்ட்

ஆ. பேஸ்புக்

**இ. கூகிள் ☑**

ஈ. அடோபி

❖ தொழில்நுட்ப நிறுவனமான கூகிள், அண்மையில் பிரபல டிக்டாக் செயலியைப்போன்ற, 'Tangi' என்ற குறுங்காணொலி தயாரிக்கும் பயன்பாட்டை அறிமுகப்படுத்தியது. டிக்டாக் செயலியைப் போன்று இதில் குறுங்காணொலிகளை உருவாக்கலாம். முதற்கட்டமாக இணையதளம் மற்றும் iOS தளத்தில் இந்தச் செயலி அறிமுகப்படுத்தப்படுகிறது. அதுமட்டுமின்றி, மக்கள் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இச்செயலியில் பல புதுமையான விஷயங்கள் புகுத்தப்பட்டுள்ளது.

❖ கூகிளின், 'Area 120'ஆல் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பெயர், 'கற்பித்தல் (Teaching) மற்றும் கொடுத்தல் (Giving)' & 'உறுதியான (Tangible)' ஆகியவற்றின் பின்னணியில் வைக்கப்பட்டுள்ளது. ஒத்த பொழுதுபோக்குகளை மையமாகக் கொண்ட சமூகங்களையும் இதில் உருவாக்கலாம்.

**3.சமீபத்திய பொருளாதார ஆய்வறிக்கை 2019–20இன்படி, எந்த மாநிலத்தில் மலிவான சைவ உணவு கிடைக்கப்பெறுகிறது?**



அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. ஜார்க்கண்ட் ☑**

ஈ. இராஜஸ்தான்

- அண்மையில், ஜன.31, 2020 அன்று தலைமைப்பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரம –ணியத்தால் பொருளாதார ஆய்வறிக்கை 2019–20 வெளியிடப்பட்டது. 'Thalinomics' (அதாவது ஒரு தட்டு உணவின் கிடைப்புத்திறன்) என்ற சொல்லாடல் இதற்கு பயன்படுத்தப்பட்டது. ஜார்க்கண்டில், ₹50'க்கும் குறைவாக ஒரு தட்டு சைவ உணவு கிடைப்பதாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 13 ஆண்டுகளில் ஒரு தட்டு சைவ உணவின் கிடைப்புத்திறன் 29% அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், கடந்த 2019ஆம் ஆண்டில் இதற்கான செலவு அதிகரித்துள்ளது என்றும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. விலைகுறைந்ததால், சைவ உணவு மட்டும் சாப்பிடும் ஒவ்வொரு குடும்பத்தினரும், சராசரியாக ஆண்டுதோறும் சுமார் ₹10,000 சேமித்துள்ளனர்.

**4.அண்மைய பொருளாதார ஆய்வறிக்கை 2019–20இன்படி, உருவாக்கப்பட்ட புதிய நிறுவனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உலகளவில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?**

அ. 3 ☑

ஆ. 4


இ. 5

ஈ. 6

3

- ஜன.31 அன்று வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கை 2019–20இன்படி புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையில், உலகளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டில் மட்டும், இந்தியாவில், 1,24,000 புதிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதும் தெரியவந்துள்ளது.
- தொழில்முனைவு குறித்த உலக வங்கியின் தரவுகளிலிருந்து நிறுவனங்கள் உருவாக்கம் குறித்த இந்தத் தரவை, இந்த ஆய்வு மேற்கோள் காட்டியுள்ளது. 2014–18 காலகட்டத்தில் அமைப்புசார்ந்த புதிய நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதம் என்பது 12.2% ஆக உள்ளது. புதிய நிறுவனங்கள் உருவாக்கம் என்பது உற்பத்தி, கட்டமைப்பு அல்லது வேளாண் துறைகளைவிட சேவைகள் துறையில் குறிப்பிடத்தகுந்த அளவு அதிகமாக உள்ளது.

**5.தொழில்நுட்ப நிறுவனமான இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின்ஸ் கார்ப்பரேஷனின் (IBM) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய – அமெரிக்கர் யார்?**



**அ. அரவிந்த் கிருஷ்ணா ☑**

ஆ. அபிதாலி நீமுச்வாலா


இ. சுந்தர் பிச்சை

ஈ. சாந்தனு நாராயண்

❖ International Business Machines Corporation (IBM) அதன் புதிய தலைவராக இந்திய – அமெரிக்கர் அரவிந்த் கிருஷ்ணாவை நியமித்துள்ளது. தற்போது அவர் IBMஇன், 'மேகக்கணிமை & அறிவாற்றல் மென்பொருள் பிரிவின்' தலைவராக பணியாற்றி வருகிறார்.

❖ IBM நிறுவனத்தால் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'Red Hat' கையகப்படுத்துதலில் அவர் முக்கியப் பங்கு வகித்தார். மேகக்கணிமை மற்றும் துளிமக்கணிமை உள்ளிட்ட பல நவீன தொழில்நுட்பங்களை IBM உருவாக்கியுள்ளது. IBM நிறுவனத்தில் நீண்டகால பெண் தலைமைநிர்வாக அதிகாரியாக இருந்த வர்ஜீனியா ரோமெட்டியை அடுத்து அரவிந்த் இந்தப்பதவிக்கு வரவுள்ளார். வர்ஜீனியா ரோமெட்டி, தொடர்ந்து IBM நிறுவனத்தின் நிர்வாகத் தலைவராக பணியாற்றுவார்.

**6.தொழுநோய் எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**




**அ. ஜனவரி 26 ☑**

ஆ. ஜனவரி 27

இ. ஜனவரி 28

ஈ. ஜனவரி 29

❖ 'தொழுநோய் எதிர்ப்பு நாள்' என்பது ஆண்டுதோறும் ஜனவரியியில் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2020) ஜனவரி 26ஆம் தேதியன்று இந்நாள் அனுசரிக்கப்பட்டது. நோயுடன் தொடர்புடைய தப்பெண்ணம் மற்றும் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கில், உலக சுகாதார நிறுவனம், 'தொழுநோய் நீங்கள் நினைப்பதுபோல் இல்லை' என்ற கருப்பொருளுடன் இந்நாளை ஏற்றுக்கொண்டது.

❖ இந்தியாவிலிருந்து தொழுநோயை ஒழிப்பதற்காக, இந்திய தொழிற்துறை கூட்டமைப்பானது (CII) சசகாவா இந்திய தொழுநோய் அறக்கட்டளை (S–ILF) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

**7.பிரிட்டன் (UK) வெளியேறிய பின்னர், தற்போது ஐரோப்பிய ஒன்றியம் அதன் தொகுதியில் எத்தனை நாடுகளைக் கொண்டுள்ளது?**

அ. 26 **ஆ. 27 ☑**

இ. 28 ஈ. 29



❖ ஐரோப்பிய ஒன்றியத்தில் கடந்த 47 ஆண்டுகளாக அங்கம் வகித்த பிரிட்டன், அந்த அமைப்பிலிருந்து விலகுவதற்கான (Brexit) உடன்படிக்கை ஜன.31 அன்று இரவு 11 மணிக்கு அமலுக்கு வந்தது. இருந்த போதிலும், 2020 டிச.31 வரை சில நடைமுறைகள் தொடரும் என ஐக்கியப்பேரரசு அறிவித்துள்ளது.

❖ இந்த இடைப்பட்ட காலத்தில், இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றிய சட்டங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் கீழ்ப்படிந்து இருக்கும். ஒன்றியத்தைவிட்டு பிரிட்டன் (UK) வெளியேறிய பின்னர், தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 27 நாடுகள் உள்ளன. இந்த வரலாற்று நிகழ்வைக் குறிக்கும் வகையில், 'ஜன.31'ஆம் தேதியை தாங்கிய அரை பவுண்ட் மதிப்புள்ள 50 பென்ஸ் நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**8.இந்திய சர்வதேச தோல் கண்காட்சி–2020 நடைபெற்ற நகரம் எது?**




அ. கோயம்புத்தூர்

**ஆ. சென்னை ☑**

இ. மதுரை

ஈ. வேலூர்

❖ 35ஆவது இந்திய சர்வதேச தோல் கண்காட்சியானது பிப்ரவரி 1 முதல் 3 வரை சென்னையில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இந்திய தோல் ஏற்றுமதி தொழிலுக்கு ஊக்கமளிக்கும் விதமாகவும், இந்தியாவை முதலீடு மற்றும் உற்பத்திக்கு உகந்த இடமாக மாற்றுவதோடு, வடிவமைப்பு மற்றும் புத்தாக்கங்களுக்கான மையமாகவும் மாற்றும் நோக்கில் ஆண்டுதோறும் இந்தக் கண்காட்சி சென்னையில் நடத்தப்படுகிறது.

❖ இக்கண்காட்சியை இந்திய வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இது, நாட்டின் நாடு கடந்த வணிகத்தை மேம்படுத்துவதற்காக வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகத்தின் உதவியுடன் செயல்படுகிறது. மூன்று நாள் நீடிக்கும் இந்தக் கண்காட்சியில், தோல் தொழில் தொடர்பான பல்வேறு வகையான தயாரிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

**9.அண்மையில் பதவிவிலகிய அபிதாலி நீமுச்வாலா, எந்தப் பிரபலமான இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக இருந்தார்?**



அ. இன்போசிஸ்

ஆ. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்

**இ. விப்ரோ ☑**

ஈ. ஹெச் சி எல்

❖ அபிதாலி நீமுச்வாலா, சமீபத்தில், முன்னணி இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான விப்ரோவின் தலைமை செயல் அதிகாரி பதவியிலிருந்து விலகுவதற்கான தனது பதவிவிலகலை சமர்ப்பித்தார். அவர், நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாகவும் குழுமத்தலைவராகவும் நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். கடந்த 2019 ஜூலை முதல் மேலாண்மை இயக்குநராகவும் பணியாற்றிவந்தார்.

❖ குடும்பச்சூழலைச் சுட்டிக்காட்டி அபிதாலி நீமுச்வாலா தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். விப்ரோ நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியத்தால் முறையாக ஒருவர் நியமிக்கப்படும்வரை அவர் தொடர்ந்து

அப்பதவியில் பணியாற்றுவார். விப்ரோ நிறுவனத்தின் தலைவர் அசிம் பிரேம்ஜி, தலைவர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றதையடுத்து, அசிம் பிரேம்ஜியின் மகன் ரிஷாத் பிரேம்ஜி முழுநேர இயக்குநராக அண்மையில் பொறுப்பேற்றது குறிப்பிடத்தக்கது.

**10.அண்மையில், புவனேசுவரத்துக்கும் எந்த இந்திய நகரத்துக்கும் இடையே, RCS – UDAN திட்டத்தின் கீழ், 250ஆவது வானூர்தி சேவையானது தொடங்கப்பட்டது?**



அ. லக்னோ

**ஆ. வாரணாசி ☑**

இ. பாட்னா

ஈ. பிரயாக்ராஜ்

- ஏர் இந்தியாவின் ஒரு முழுமையான துணை நிறுவனமான அலையன்ஸ் ஏர், அண்மையில் புவனேசு–வரத்திலிருந்து வாரணாசி வரையிலான நேரடி வானூர்தி சேவையை தொடங்கியது. RCS – UDAN (பிராந்திய இணைப்புத்திட்டம் – உதே தேஷ் கா ஆம் நாக்ரிக்)'இன்கீழ் இந்தத் தினசரி வானூர்தி போக்குவரத்துச் சேவை தொடங்கப்பட்டுள்ளது. RCS – UDAN திட்டத்தின்கீழ் இயக்கப்படும் 250ஆவது மற்றும் RCSஇன்கீழ் அலையன்ஸ் ஏர் தொடங்கிய 58ஆவது வானூர்தி சேவையாகும் இது.
- அண்மையில் இந்த விமான நிறுவனம், கொல்கத்தா – ஜார்சுகுடா வழித்தடத்தில் தினசரி வானூர்தி சேவையைத் தொடங்கியது. இவ்வானூர்தி, மதியம் 12.15 மணிக்கு புவனேசுவரிலிருந்து புறப்பட்டு மதியம் 2.05 மணிக்கு வாரணாசியை அடைகிறது. வாரணாசியிலிருந்து பிற்பகல் 2.30 மணிக்கு புறப்படும் இவ்வானூர்தி, மாலை 4.20 மணிக்கு புவனேசுவரத்தைச் சென்றடைகிறது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 'கோ – 6' என்ற சிறிய வெங்காய இரகத்தைக் கண்டறிந்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலை வெளியீடு செய்துள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மைய மத்திய பட்ஜெட் 2020-21இன்படி, 2020-21ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கம், எவ்வளவு மதிப்பிலான முதலீட்டைத் திரும்பப்பெற முடிவுசெய்துள்ளது?**

அ. ₹1.0 இலட்சம் கோடி

ஆ. ₹1.1 இலட்சம் கோடி

**இ. ₹1.2 இலட்சம் கோடி ☑**

ஈ. ₹1.2 இலட்சம் கோடி



❖ 2020-21 மத்திய பட்ஜெட்டில், 2020-21ஆம் நிதியாண்டில் அரசாங்கம் தனது முதலீட்டைத் திரும்பப் பெறும் இலக்கை ₹1.2 இலட்சம் கோடியாக நிர்ணயித்துள்ளது. LIC & IDBI வங்கி உள்ளிட்ட பொதுத் துறை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள அரசின் பங்குகளை திரும்பப்பெறுவதன்மூலம், ₹90,000 கோடி வருவாயை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

❖ இதன்மூலம், மொத்தம் ₹2.1 இலட்சம் கோடி மதிப்புடைய முதலீடுகளைத் திரும்பப்பெற அரசாங்கம் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, ₹1.05 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகளைத் திரும்பப்பெறும் இலக்கை அரசாங்கம் தவறவிட்டுள்ளது. இதுவரை, முதலீடுகளைத் திரும்பப்பெறுவதன்மூலம் மட்டும் ₹18,000 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட மதிப்பீடுகள், இந்த நிதியாண்டில், முதலீடுக-ளைத் திரும்பப்பெறுவதற்கான இலக்காக ₹65,000 கோடியை நிர்ணயித்துள்ளன.

**2.அண்மைய மத்திய பட்ஜெட்டின்படி, 2020-21ஆம் நிதியாண்டுக்கான மதிப்பிடப்பட்ட பற்றாக்குறை விகிதம் என்ன?**

அ. 3.3 %

ஆ. 3.4 %

**இ. 3.5 % ☑**

ஈ. 3.6 %



❖ நடப்பு நிதியாண்டில் வரவுக்கும்-செலவுக்கும் இடையேயான பற்றாக்குறையை 3.3 சதவீதத்துக்குள் வைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அது, 3.8% ஆக அதிகரித்துவிட்டது. இந்நிலையில், வரும் ஏப்.1ஆம் தேதி முதல் தொடங்கும் நிதியாண்டில் பற்றாக்குறை விகிதத்தை 3.5 சதவீதத்துக்குள் வைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிதிப்பொறுப்புணர்வு மற்றும் பட்ஜெட் மேலாண்மை (FRBM) சட்டத்தின்கீழ், பிரிவு 4 (2) ஆனது எதிர்பாராத அழுத்தத்தின்போது அதன் பற்றாக்குறை விகிதத்தை தளர்த்த அரசாங்கத்தை அனுமதிக்கிறது. திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் முந்தைய இலக்கை 3.8 சதவீதமாக அதிகரிக்க இந்தப்பிரிவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**3.அண்மைய மத்திய பட்ஜெட் 2020–21இன்படி, வங்கி வைப்புகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச காப்பீடு எவ்வளவு?**

அ. ₹1 இலட்சம்

ஆ. ₹2 இலட்சம்




இ. ₹2.5 இலட்சம்

**ஈ. ₹5 இலட்சம் ☑**

❖ மத்திய நிதியமைச்சர் தனது அண்மைய மத்திய பட்ஜெட் 2020–21இல், வங்கி வைப்புநிதிகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச காப்பீட்டை ₹5 இலட்சமாக உயர்த்தி அறிவித்தார். இந்திய ரிசர்வ் வங்கியின் தற்போதைய வழிகாட்டுதல்களின்படி, அனைத்து வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளிலும், வாடிக்கையாளர்களின் எந்தவொரு கணக்கிலும் (நடப்பு, சேமிப்பு, நிலை) உள்ள வைப்புத்தொகை, வைப்புநிதிக்காப்பீடு மற்றும் கடன் உறுதிக்கழகத்தின்கீழ் காப்பீடு செய்யப்படுகிறது.

❖ இதுவரை ₹1 இலட்சம் வரை இருந்த காப்பீடு இனி ₹5 இலட்சமாக இருக்கும். அதாவது, ஒரு வங்கி திவாலானால், வைப்புத்தொகையில் ₹5 இலட்சம் வரையிலான பணம் திரும்பக்கிடைக்கும்.

**4.வேளாண் பொருட்களை கொண்டுசெல்வதற்காக விமானப்போக்குவரத்து அமைச்சகத்தால் செயல்படு–த்தப்படவுள்ள, பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டத்தின் பெயர் என்ன?**

அ. உதான் 5.0 திட்டம்



ஆ. கிசான் உதான் திட்டம்

**இ. கிருஷி உதான் திட்டம் ☑**

ஈ. பிரதமர் கிசான் உதான் திட்டம்

❖ விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை கொண்டுசெல்வதற்காக விமானப்போக்குவரத்து அமைச்சகத்தால் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டம், பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 'கிருஷி உதான் திட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் வடகிழக்கு மற்றும் பழங்குடியினர் அதிகம் வாழும் மாவட்டங்களில் மிகுந்த கவனம் செலுத்தும். மலிவு விலையில் பிராந்திய இணைப்பை அதிகரிப்பதற்காக, கடந்த 2016ஆம் ஆண்டில் 'உதான் திட்டம்' தொடங்கப்பட்டது.

**5.அண்மையில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓப்பன் போட்டி–2020இல், ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**



அ. ரோஜர் பெடரர் ஆ. ரபேல் நடால்

**இ. நோவக் ஜோகோவிச் ☑** ஈ. டொமினிக் தீம்

❖ ஆஸ்திரேலிய ஓப்பன் இறுதிப்போட்டியில், செர்பிய டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச் 6–4, 4–6, 2–6, 6–3, 6–4 என்ற செட்கணக்கில் ஆஸ்திரியாவின் டொமினிக் தீமை வீழ்த்தி தனது எட்டாவது ஆஸ்திரேலிய ஓப்பன் பட்டத்தை தொடர்ந்து இரண்டாவது முறையாக வென்றார். இது ஜோகோவிச்

தனது டென்னிஸ் வாழ்வில் பெறும் 17ஆவது கிராண்ட்ஸ்லாம் கோப்பையாகும். ரோஜர் பெடரர் (20) மற்றும் ரபேல் நடால் (19) ஆகியோருக்கு அடுத்த இடத்தில் நோவக் ஜோகோவிச் உள்ளார்.

❖ 32 வயதான நோவக் ஜோகோவிச், ஏற்கனவே 5 விம்பிள்டன், 3 US ஓப்பன் மற்றும் 1 பிரெஞ்சு ஓப்பன் பட்டங்களை வென்றுள்ளார்.

**6.பிரமோத் அகர்வால், அண்மையில், எந்தப்பொதுத்துறை நிறுவனத்தின் புதிய தலைவராகவும் நிர்வாக இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார்?**



அ. இந்திய உருக்கு ஆணையம் (SAIL)

**ஆ. இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL) ☑**

இ. பாரத மிகுமின் நிறுவனம் (BHEL)

ஈ. இந்தியன் எண்ணெய் நிறுவனம் (IOCL)

❖ மகாரத்னா தகுதியுடைய பொதுத்துறை நிறுவனமான இந்திய நிலக்கரி நிறுவனத்தின் (CIL) புதிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பிரமோத் அகர்வால் பொறுப்பேற்றார். இந்த நியமனத்திற்கு முன்பு, அவர், மத்தியபிரதேசத்தின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுவசதித்துறையின் தலைமைச் செயலாளராக பணியாற்றிவந்தார். ஜன.31, 2020 அன்று இந்திய நிலக்கரி நிறுவனத்தின் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற A K ஜாவை அடுத்து பிரமோத் அகர்வால் பதவியேற்றார்.

**7. IRCTCஇன் மூன்றாவது தனியார் இரயில் சேவையானது வாரணாசிக்கும் எந்த இந்திய நகரத்துக்கும் இடையே இயக்கப்படவுள்ளது?**




**அ. இந்தூர் ☑**

ஆ. போபால்

இ. நாக்பூர்

ஈ. ஜெய்ப்பூர்

❖ IRCTCஇன் மூன்றாவது தனியார் இரயில் இந்தூர்–வாரணாசி இடையே இயக்கப்படும் என இரயில்வே வாரியத்தலைவர் வினோத் குமார் யாதவ் தெரிவித்துள்ளார். இந்த இரயிலில் ஹம்சாபர் எக்ஸ்பிரஸில் உள்ளதைப்போலவே பெட்டிகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரயில் வாரத்தில் மூன்று நாட்களுக்கு இயக்கப்படவுள்ளது. அவற்றில் 2 நாட்கள் லக்னோ வழியாகவும் ஒருநாள் அலகாபாத் வழியாகவும் இயக்கப்படும். முதல் இரண்டு தனியார் இரயில்கள் தில்லி–லக்னோ மற்றும் அகமதாபாத்–மும்பை ஆகிய இரு வழித்தடங்களில் இயக்கப்பட்டுவருகின்றன.

**8.இலங்கைக்கான இந்தியாவின் உயராணையராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய தூதர் யார்?**



அ. அஜய் பிசாரியா

**ஆ. கோபால் பாக்லே ☑**

இ. வினய் மோகன் குவாத்ரா

ஈ. தரஞ்சித் சிங் சந்து

- மூத்த இந்திய தூதரான கோபால் பாக்லே, அண்மையில், இலங்கைக்கான இந்திய உயராணையராக நியமிக்கப்பட்டார். தற்போது பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றிவரும் கோபால் பாக்லே, விரைவில் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் அமெரிக்காவுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்ட தரஞ்சித் சிங் சந்துவை அடுத்து, கோபால் பாக்லே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர், பாகிஸ்தானுக்கான இந்திய துணை உயராணையராகவும், வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

**9.வெட்டுக்கிளித் தாக்குதலை சமாளிப்பதற்கான தேசிய அவசரநிலையில் உள்ள நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. பாகிஸ்தான் ☑**

இ. ஈரான்

ஈ. ஆப்கானிஸ்தான்



- பஞ்சாப் மாகாணத்தில் கடந்த பல ஆண்டுகளில் காணாத எண்ணிக்கையில் வெட்டுகிளிகள் பெருகி, பயிர்களை நாசம்செய்துவருகின்றன. இதுதொடர்பாக, பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான கூட்டம் இஸ்லாமாபாதில் நடைபெற்றது. அப்போது, வெட்டுக்கிளிகளைக் கட்டுப்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்ள அவசர நிலை அறிவிக்கப்பட்டது. மேலும், அந்தப்பணிகளுக்காக ₹730 கோடி ஒதுக்கீடு செய்ய அக்கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதே காரணத்திற்காக சோமாலியாவும், அண்மையில், தேசிய அவசரநிலையை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**10.எந்த இந்திய நகரத்தில், இந்திய கடற்படை தனது, 'மாத்லா அபியான்' என்னும் கடலோர பாதுகாப்புப் பயிற்சியை நடத்தியது?**

அ. கொச்சின்

**ஆ. கொல்கத்தா ☑**

இ. மும்பை

ஈ. விசாகப்பட்டினம்




- ஜன.29ஆம் தேதி தொடங்கி ஐந்துநாள் நீடித்த, 'மாத்லா அபியான்' என்ற கடலோர பாதுகாப்புப் பயிற்சியை கொல்கத்தாவில் இந்திய கடற்படை நடத்தியது. சுந்தரவனங்களைச் சுற்றி ஓடும், 'மாட்லா' ஆற்றின் பெயரே இப்பயிற்சிக்கு சூட்டப்பட்டுள்ளது. இப்பயிற்சியின்போது, கடற்படை வீரர்கள் கடலோர காவல்நிலையங்களுடன் உரையாடினர்.

- கடலோர பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக, இந்திய கடற்படைக் குழு, உள்ளூர் பள்ளிகளையும் பார்வையிட்டது. இந்தப் பயிற்சி, சுந்தரவனத்தில் உள்ள ஊடுருவல் தொடர்புடைய சிக்கல்களைப்புரிந்துகொள்வதற்கு கடற்படைக்குழுவினருக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. "அதிநவீன பகுப்பாய்வு & தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் (Sophisticated Analytical & Technical Help Institutes – SATHI)" என்பது எந்த அமைச்சகத்தின் முன்முயற்சியாகும்?**

அ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

ஈ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழியங்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, "அதிநவீன பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் (SATHI)" என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த 'SATHI', உயர்தர பகுப்பாய்வு சோதனைக்கருவிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும், பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக அயல்நாட்டு நிறுவனங்களைச் சார்ந்திருக்கும் நிலையை இது குறைக்கிறது. அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு ஐந்து, 'SATHI' மையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அறிவித்துள்ளது.
- IIT கரக்பூர், IIT தில்லி மற்றும் BHU ஆகிய இடங்களில் ஏற்கனவே இதுபோன்ற மூன்று நிறுவனங்கள், மொத்தம் ₹375 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

**2.அண்மையில், மத்திய பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சரால் வழங்கப்பட்ட, 'பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்தியதற்கான' விருதைப்பெற்ற மாநிலம் எது?**

**அ. மத்தியபிரதேசம் ☑**

ஆ. ஆந்திரபிரதேசம்

இ. கருநாடகம்

ஈ. குஜராத்

- கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான, 'பேறுகால உதவித்திட்டத்தை' சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு, புது தில்லியில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி சூபின் இரானி, பிரதமரின் மாத்ரு வந்தனா யோஜனா விருதுகளை வழங்கினார்.
- இதில், 1 கோடிக்கும் மேற்பட்ட மக்கட்தொகைகொண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கான பிரிவில், மத்தியபிரதேசம் முதலிடத்தையும் ஆந்திரபிரதேசம் இரண்டாவது இடத்தையும், ஹரியானா மூன்றாவது இடத்தையும் பெற்றன. 1 கோடிக்கும் குறைவான மக்கட்தொகைகொண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கான பிரிவில், தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி முதலிடத்தையும் ஹிமாச்சல பிரதேசம் இரண்டாவது இடத்தையும், சண்டிகர் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

**3.புதிய கொரோனா வைரஸால் ஏற்பட்ட நோயை, "மாநிலப்பேரிடர்" எனச் சமீபத்தில் அறிவித்த இந்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. கருநாடகம்

ஈ. தெலுங்கானா




- கேரள மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பாதிப்பை, 'மாநிலப்பேரிடர்' என அம்மாநில அரசு அறிவித்துள்ளது. அம்மாநிலத்தைச்சேர்ந்த மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து, இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் நோய்த்தொற்றானது, இந்தியாவில், கேரள மாநிலத்தில்தான் முதன்முதலாக கண்டறியப்பட்டது.
- புதிய கொரோனா வைரஸ், முதன்முதலில் சீனத்தின் வுஹான் நகரத்தில் கண்டறியப்பட்டது. தற்போது வரை கிட்டத்தட்ட 25 நாடுகளுக்கு இந்தக் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவியுள்ளது.

**4.அண்மையில் எந்த மாநிலத்தில், ஹூப்ளி – தார்வாட் வரையிலான விரைவுப்பேருந்து போக்குவரத்து முறை (BRTS) திட்டம் தொடங்கப்பட்டது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. கருநாடகம் ☑**

ஈ. தெலுங்கானா



- குடியரசு துணைத்தலைவர் M வெங்கையா, அண்மையில், கர்நாடகாவின் இரட்டை நகரங்களான ஹூப்ளி முதல் தார்வாட் வரையிலான விரைவுப்பேருந்து போக்குவரத்து முறை (BRTS) திட்டத்தை தொடங்கிவைத்தார். 970 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டத்திற்கு, மாநில மற்றும் மத்திய அரசுகள் மற்றும் உலக வங்கி இணைந்து நிதியளித்துள்ளன.
- சோதனை அடிப்படையில் இருநகரங்களுக்கு இடையில் தொடங்கப்பட்ட இந்தச் சேவை, ஏற்கனவே நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகளுக்கு சேவையளித்து வருகிறது. தற்போது முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் இது, மாநிலத்தின் பொதுப் போக்குவரத்தில் பேரூக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.வங்கியாளர் இதழின்படி, "ஆண்டின் சிறந்த மத்திய வங்கியாளர் (ஆசியா–பசிபிக் பிராந்தியம்–2020)" என அறிவிக்கப்பட்ட இந்திய வங்கியாளர் யார்?**

அ. ரகுராம் ராஜன் **ஆ. சக்திகாந்த தாஸ் ☑**

இ. உர்ஜித் படேல் ஈ. விரால் ஆச்சார்யா



- வங்கியாளர் இதழின்படி, "ஆண்டின் சிறந்த மத்திய வங்கியாளர் (ஆசியா–பசிபிக் பிராந்தியம்–2020)" என இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் அறிவிக்கப்பட்டுள்ளார். "ஆண்டின் சிறந்த சர்வதேச மத்திய வங்கியாளர்" விருது, செர்பிய தேசிய வங்கியின் ஜோர்கோவங்கா தபகோவிக்கு வழங்கப்பட்டது. வளர்ச்சியை ஊக்குவிப்பதையும், நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதையும் கணிசமாக நிர்வகித்த மத்திய வங்கியாளர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

- வங்கிசாரா நிதி நிறுவனங்களின் சிக்கல் மற்றும் இந்திய வங்கிகளின் வாராக்கடன்கள் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாக நிர்வகித்தமைக்காக சக்திகாந்த தாஸ் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

**6. 'காலா கோடா கலைவிழா' எனப்படும் புகழ்பெற்ற கலைவிழா, ஆண்டுதோறும் எந்த இந்திய நகரத்தில் கொண்டாடப்படுகிறது?**

அ. புது தில்லி

**ஆ. மும்பை ☑**

இ. கொல்கத்தா

ஈ. பெங்களூரு



- 'காலா கோடா கலைவிழா' என அழைக்கப்படும் பிரபலமான கலைவிழா, ஆண்டுதோறும் மும்பை நகரத்தில் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு நடைபெறுவது இவ்விழாவின் 21ஆவது பதிப்பாகும். இந்த ஆண்டு (2020), 9 நாள் நீடிக்கும் இவ்விழாவில் கலை, இசை, திரைப்படம், இலக்கியம், நாடகம் மற்றும் பாரம்பரிய நடைகள் தொடர்பான 12 பிரிவுகளில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

- காலா கோடா கலைவிழாவின் இந்த ஆண்டின் பதிப்பு, வழக்கமான நிதியுதவி இல்லாமல், 'Ketto' என்ற தளத்தைப் பயன்படுத்தி கூட்டுநிதித்திரட்டல்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவை, 1999ஆம் ஆண்டு முதல் காலா கோடா சங்கம் ஏற்பாடுசெய்துவருகிறது.

**7.அண்மையில் எந்த நகரத்தில், மூன்றாவது பாதுகாப்புப் பிரிவுகள் மாநாடு–2020 நடைபெற்றது?**

அ. அகமதாபாத்

**ஆ. புது தில்லி ☑**

இ. கான்பூர்

ஈ. லக்னோ



- புது தில்லியில் நடைபெற்ற மூன்றாவது பாதுகாப்புப் பிரிவுகள் மாநாட்டை மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார். மேலும் 10 வெவ்வேறு நாடுகளில், இந்தியா, மேலும் 10 பாதுகாப்புப் பிரிவுகளை நியமிக்கவுள்ளது எனவும் அவர் அறிவித்தார்.

- கூடுதலாக 10 பாதுகாப்புப் பிரிவுகளை உருவாக்குவது என்பது நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் மற்றும் பாதுகாப்புத் துறையில் ஏற்றுமதியை அதிகரிக்க உதவும். மத்திய அரசின் பாதுகாப்புத்துறை ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், முப்பத்து நான்கு நாடுகளுக்கு பாதுகாப்புப் பிரிவுகள்மூலம் ஏற்றுமதிக்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

**8.இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவியலாளர்கள், அண்மையில், எந்த நோய்க்கான மலிவு விலை தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர்?**



அ. பறவைக்காய்ச்சல்

**ஆ. பன்றிக்காய்ச்சல் ☑**


இ. கால் மற்றும் வாய் நோய்

ஈ. குரங்கம்மை

❖ இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் (ICAR) ஒரு நிறுவனமான இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவியலாளர்கள், அண்மையில், பன்றிக்காய்ச்சலுக்கான மலிவுவிலை தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர். பன்றிக்காய்ச்சல் (swine–flu) என்பது பன்றிகளில் அதிக எண்ணிக்கையிலான இறப்பு மற்றும் நோய்த்தொற்றை ஏற்படுத்தக்கூடிய ஒரு நோயாகும்.

❖ தற்போதுவரை, உள்நாட்டு பயன்பாட்டிற்கான பன்றிக்காய்ச்சல் தடுப்பூசிகள், இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இவை, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகின்றன. ஆனால், இந்தப் புதிய, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசியானது வாழ்நாளில் ஒருமுறை தந்தால் போதுமானது. இது, பன்றி இறைச்சி உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு உதவும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**9.மும்பை சர்வதேச திரைப்படவிழா 2020இல், 'சிறந்த ஆவணப்படத்திற்கான தங்கச்சங்கு' விருதை வென்ற, "Babenco: Tell Me When I Die" என்பது எந்த நாட்டின் திரைப்படமாகும்?**




அ. கனடா

**ஆ. பிரேசில் ☑**

இ. பிரான்ஸ்

ஈ. தென் கொரியா

❖ மும்பை சர்வதேச திரைப்படவிழா 2020இல், "சிறந்த ஆவணப்படத்திற்கான தங்கச்சங்கு" "Babenco: Tell Me When I Die" என்ற திரைப்படம் வென்றது. இந்தப் பிரேசிலிய ஆவணப்படத்தை, இயக்குநர் பார்பரா பாஸ் இயக்கியுள்ளார். மகாராஷ்டிர ஆளுநர் பகத்சிங் கோஷ்யரி பங்கேற்ற இந்தத் திரைப்பட விழாவின் 16ஆவது பதிப்பில், இந்த விருது வழங்கப்பட்டது.

❖ நாகராஜ் மஞ்சுலேவின், 'பாவ்சச்சா நிபந்த்' "சிறந்த குறும்படத்திற்கான வெள்ளிச்சங்கு" விருதைப் பெற்றது. "சிறந்த அனிமேசன் திரைப்படத்திற்கான வெள்ளிச்சங்கு" விருதை ஜெர்மன் திரைப்படமான, "Portrait of Suzanne" & திவாகர் SKஇன் இந்திய படமான, "பனங்காட்டு நரி"யும் பகிர்ந்துகொண்டன.

**10. L&T MBDA ஏவுகணை அமைப்புகள், அண்மையில் எந்த மாநிலத்தில், ஏவுகணை ஒருங்கிணைப்பு வசதியை அமைத்தன?**




**அ. தமிழ்நாடு ☑** ஆ. கேரளா

இ. கருநாடகம் ஈ. தெலுங்கானா

❖ இந்தியாவின் பன்னாட்டு பொறியியல் குழும நிறுவனமும் தனியார்துறை பாதுகாப்புத் தளவாட நிறுவனமுமான லார்சன் & டூப்ரோ (L&T), ஏவுகணைத் தொழில்நுட்பங்களில் முன்னணி வகிக்கும் MBDA நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுமுயற்சியில் கோயம்புத்தூர் மாநகரத்தில் ஓர் ஏவுகணை ஒருங்கிணைப்பு தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.


❖ உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளைக் கருத்தில் கொண்டு, LTMMSL நிறுவனம், ஏவுகணை உபகரண ஒருங்கிணைப்பு, வெடிபொருள் அல்லாத ஏவுகணை ஒருங்கிணைப்பு, ஏவுகணை துணை தொழில்நுட்பங்கள், ஏவுகணை ஆயுதம் செலுத்தல் அமைப்புகளுக்கான பரிசோதனை வசதியை கோயம்புத்தூரில் உள்ள சிறப்புப்பொருளாதார மண்டலத்தில் அமைத்துள்ளது. இது, தமிழ்நாடு பாதுகாப்புத் தொழிற்துறை வழித்தடத்தின் ஒருபகுதியாக நிறுவப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தொல்லியல் முக்கியத்துவம்வாய்ந்த ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட இந்தியா முழுவதுமுள்ள 5 இடங்களில் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என 2020–21 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில், 1902–1904 வரையிலும் 2004ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் முதுமக்கள் தாழிகள் உள்ளிட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. அந்தப்பொருட்களில் மேற்கொள்ளப்பட்ட கரிம பகுப்பாய்வில், அவற்றின் காலம் 3,000 ஆண்டுகளுக்கு முந்தையது என்பது தெரியவந்தது.

❖ தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோவிலின் குடமுழுக்கு திருவிழாவானது 2020 பிப்ரவரி 5 அன்று சுமார் 23 ஆண்டுகளுக்குப் பிறகு வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இதற்கு முன்பு, கடந்த 1997ஆம் ஆண்டின்போது இந்தக்கோவிலின் குடமுழுக்கு விழா கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு (2020) நடந்தேறிய குடமுழுக்கு விழாவின் சிறப்பு யாதெனில், முழு குடமுழுக்கு விழாவும் தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட தமிழ்த்திருமந்திரங்கள் முழங்க நடந்தேறியது. இதற்கான தீர்ப்பை, மெட்ராஸ் உயர்நீதிமன்றம் வழங்கியிருந்தது.



---

# நடப்பு நிகழ்வுகள்

**1.பல்வேறு அரசாங்க சேவைகளை குடிமக்களுக்கு வழங்குவதற்காக, அண்மையில், 'ஜனசேவகா' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**




அ. மத்தியபிரதேசம்

ஆ. ஆந்திரபிரதேசம்

**இ. கருநாடகம் ☑**

ஈ. குஜராத்

- குடும்ப அட்டைகள், மூத்த குடிமக்கள் அடையாள மற்றும் நலவாழ்வு அட்டைகள் போன்ற பல்வேறு அரசாங்க ஆவணங்களை வீட்டுக்கேவந்து வழங்கும் 'ஜனசேவகா' திட்டத்தை, கர்நாடக மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டத்தில் பதினொரு துறைகள்சார்ந்த ஐம்பத்துமூன்று சேவைகள் உள்ளன. 'சகலா' திட்டத்தின்கீழ் வரும் ஜனசேவகா என்பது வீட்டு வாசலில் அரசாங்கத் திட்டங்களின் நன்மைகளைப்பெறும் ஓர் அம்சமாகும்.
- தரசஹள்ளி பகுதியில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ள இந்தத்திட்டம், பெங்களூரு, மைசூரு மற்றும் ஹூப்ளி – தார்வாட் பகுதிகளிலும் விரைவில் விரிவுபடுத்தப்படும்.

**2.ரிசர்வ் வங்கிக்கட்டுப்பாட்டின்கீழ், எவ்வகை வங்கிகளைக்கொண்டுவருவதற்கான திருத்தங்களுக்கு, இந்திய மத்திய அமைச்சரவை, அண்மையில் ஒப்புதல் அளித்தது?**




**அ. பல மாநில கூட்டுறவு வங்கிகள் ☑**

ஆ. நில மேம்பாட்டு வங்கிகள்

இ. தொடக்க வேளாண்மை சங்கங்கள்

ஈ. நிதி நிறுவனங்கள்

- இந்திய ரிசர்வ் வங்கி கட்டுப்பாட்டின்கீழ், பல மாநில கூட்டுறவு வங்கிகளைக் கொண்டுவரும் வங்கி ஒழுங்குமுறைச் சட்டதிருத்தங்களுக்கு இந்திய மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இது, கூட்டுறவு வங்கிகளில் நடக்கும் முறைகேடுகளைத் தடுக்கும் மற்றும் சிறந்த ஒழுங்குமுறையை உறுதிசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- வங்கிகளின் நிர்வாகப்பதவிகள் கூட்டுறவு பதிவாளர்களால் நிர்வகிக்கப்படும். பஞ்சாப் & மகாராஷ்டிர கூட்டுறவு வங்கியில் (PMC), கடந்த ஆண்டு நிகழ்ந்த முறைகேடுகளின் பின்னணியில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி கூட்டுறவு வங்கிகளின் கணக்குத் தணிக்கையும் செய்யப்படும்.


**3.எந்த நாட்டின் கல்வி நிறுவனங்களின் தூதுக்குழு, அண்மையில், இந்தியாவுக்கு வருகைதந்து உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறைகள் சார்ந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது?**

அ. கனடா

**ஆ. நார்வே ☑**

இ. ஜெர்மனி

ஈ. ஜப்பான்



❖ நார்வேயின் கல்வி & ஆராய்ச்சி அமைச்சகத்தின் அதிகாரிகள், அண்மையில், புது தில்லியில் வைத்து உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகள் சார்ந்த ஒப்பந்தங்களில் இந்தியாவுடன் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம், நார்வேயின் முக்கியமான கல்வி நிறுவனங்கள் இந்தியாவுக்கு வருகைதந்ததன் ஒரு பகுதியாக உள்ளது.

❖ கையெழுத்திடப்பட்ட பல ஒப்பந்தங்களில், உயிரி–ஒளியனியல், சுகாதாரம் மற்றும் கண்டறி கருவிகள், மீநுண் தொழினுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு நல்குவதற்காக, இந்திய தொழினுட்ப நிறுவனம் (IIT) தில்லி மற்றும் நார்வே ஆர்க்டிக் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒப்பந்தம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

**4.மத்திய பிரதேச அரசின், 2018ஆம் ஆண்டுக்கான, 'கிஷோர் குமார் சம்மன்' விருதைப் பெற்ற இந்திய நடிகர் யார்?**

**அ. வாகீதா ரெஹ்மான் ☑**

ஆ. ஆஷா பரேக்

இ. வைஜெயந்திமாலா

ஈ. ஹேமா மாலினி



❖ மூத்த இந்திய நடிகர் வாகீதா ரெஹ்மானுக்கு, அண்மையில், 2018ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க 'கிஷோர் குமார் சம்மன்' விருது வழங்கப்பட்டது. இந்த விருதை மத்திய பிரதேச அரசு நிறுவியுள்ளது. புகழ்பெற்ற நடிகர் கிஷோர் குமாரின் நினைவுநாளான கடந்த 2019 அக்டோபர் 13 அன்று பிரபல நடிகர் பிரியதர்ஷனுக்கு, 2019ஆம் ஆண்டுக்கான 'கிஷோர் குமார் சம்மன்' விருது வழங்கப்பட்டது. அப்போது வாகீதா ரெஹ்மானால் இந்த விருதைப் பெறமுடியாததால், அவருக்கு இப்போது விருது வழங்கப்பட்டது. மத்திய பிரதேச கலாசார அமைச்சர் Dr.விஜயலட்சுமி சாதோ, அவருக்கு இவ்விருதை வழங்கினார்.

**5.அண்மையில் காலமான பிரணாப் குமார் கோகோய், எந்தத் துறைசார்ந்தவராக இருந்தார்?**

அ. விளையாட்டு

ஆ. இலக்கியம்

இ. கலை

**ஈ. அரசியல் ☑**



❖ அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள சிவசாகர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான பிரணாப் குமார் கோகோய், சமீபத்தில் காலமானார். அவர், அஸ்ஸாம் மாநில சட்டமன்றத்தின் அவைத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். "அஸ்ஸாமி" என்ற சொல்லின் வரையறையை அறிமுகப்படுத்தியவராக அவர் பொதுவாக அறியப்படுகிறார்.


**6. 15ஆவது கிழக்காசிய உச்சிமாநாடு–2020ஐ நடத்தவுள்ள இந்திய நகரம் எது?**

அ. சென்னை ☑

ஆ. ஹைதராபாத்

இ. புது தில்லி

ஈ. அகமதாபாத்




❖ 15ஆவது கிழக்காசிய உச்சிமாநாடு மாநாடு–2020ஐ தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நடத்த இந்தியா முடிவு செய்துள்ளது. கடல்சார் பாதுகாப்பில் ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் துறையில் உள்ள சவால்கள் குறித்து இந்த மாநாடு முக்கியமாக கவனம் செலுத்தும்.

❖ 2019 நவம்பரில் பாங்காக்கில் நடந்த 14ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டின்போது, ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா அரசாங்கங்களுடன் இணைந்து, அடுத்த கிழக்காசிய உச்சிமாநாட்டை இந்திய வெளியுறவு அமைச்சகம் நடத்தும் என இந்தியப்பிரதமர் அறிவித்தார். அறிவித்தபடி, கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான கிழக்காசிய உச்சிமாநாடு வரும் 2020 பிப்ரவரி 6–7 வரை, சென்னையில் நடைபெறும். இது, இந்தியா ஏற்பாடு செய்யும் நான்காவது கிழக்காசிய உச்சிமாநாடு ஆகும்.

**7.ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும், 'DefExpo' என்னும் இந்தியாவின் முன்னணி பாதுகாப்புக் கண்காட்சி நடைபெறவுள்ள இந்திய நகரம் எது?**

அ. புது தில்லி

ஆ. லக்னோ ☑

இ. பெங்களுரு

ஈ. ஹைதராபாத்

❖ ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும், 'DefExpo' என்னும் இந்தியாவின் முன்னணி பாதுகாப்புக் கண்காட்சியை அண்மையில் உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார். தொடக்க நிகழ்வில், உத்தரபிரதேச மாநில முதலமைச்சரும் கலந்துகொண்டார். இந்த விழாவின்போது கடற்படை அமைப்புகள், வான்வழி அமைப்புகள் மற்றும் நில அமைப்புகளின் நேரடி செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டன.

❖ "இந்தியா: வேகமாக உருவெடுத்துவரும் பாதுகாப்பு சாதன உற்பத்திக்கேந்திரம் – India: The Emerging Defence Manufacturing Hub" என்பது 'DefExpo–2020'இன் கருப்பொருளாகும். கண்காட்சியின் துணை கருப்பொருள், "பாதுகாப்புத்துறையை டிஜிட்டல் முறைக்கு மாற்றியமைத்தல் – Digital Transformation of Defence" என்பதாகும். ஐந்து நாள் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் 70க்கும் மேற்பட்ட நாடுகளைச்

சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் இராணுவ உற்பத்தியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். ஐந்தாவது இந்தியா–இரஷ்யா இராணுவ தொழிற்துறை மாநாடு, இந்நிகழ்வின் ஒருபகுதியாக நடைபெறவுள்ளது.

**8.இந்தியர்கள் உள்ளிட்ட பிராந்தியங்களின் சுற்றுலாப்பயணிகளுக்காக, "நீடித்த வளர்ச்சி கட்டணம் – Sustainable Development Fee" என்றவொன்றை அண்மையில் அறிமுகப்படுத்திய ஆசிய நாடு எது?**

அ. தாய்லாந்து

**ஆ. பூடான் ☑**

இ. கம்போடியா

ஈ. இலங்கை

❖ இந்தியா, மாலத்தீவுகள், வங்கதேசம் ஆகிய நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு, "நீடித்த வளர்ச்சிக்கட்டணமாக" நாளொன்றுக்கு பூடான் நாட்டுப் பணத்தில் 1200 கட்டணம் வசூலிக்க முடிவு அந்நாடு செய்துள்ளது. 2020 ஜூலை முதல் இந்தத்திட்டம் அமலாகிறது.

❖ புதிய சுற்றுலாக்கொள்கையின்படி தேசியப் பேரவையில் இந்தப் புதிய முடிவு எடுக்கப்பட்டது. இந்த 3 நாட்டுப் பயணிகளுக்குத்தான் $16.85 டாலர்கள் வரை கட்டணம் வசூல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மற்ற நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு $65 டாலர்கள் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துவருவதால், போக்குவரத்து கட்டுப்பாட்டை கையாளுவதற்கு இந்தக்கட்டணம் அரசுக்கு உதவும்.

**9.மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவையால் மதிப்பிடப்பட்டபடி, 2020–21ஆம் நிதியாண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 6.5 %

ஆ. 6.0 %

**இ. 5.5 % ☑**

ஈ. 5.0 %

❖ மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவையானது அண்மையில் வரவிருக்கும் நிதியாண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கான மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது. இது, அடுத்த 2020 – 21ஆம் நிதியாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சிக்கான கணிப்பை அதன் முந்தைய மதிப்பீடான 6.3 சதவீதத்திலிருந்து 5.5 சதவீதமாகக் குறைத்துள்ளது.

❖ அரசாங்கத்தின் பொருளாதார ஆய்வானது அடுத்த நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6–6.5% இருக்கும் எனக் கணித்திருந்தது. மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடையும் நடப்பு நிதியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 4.9 சதவீதமாக இருக்கும் எனவும் மூடிஸ் கணித்துள்ளது; இது, அரசாங்கத்தின் மதிப்பீட்டைவிட சற்றே குறைவாக உள்ளது. 2021–22ஆம் நிதியாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சிக்கான கணிப்பை அதன் முந்தைய மதிப்பீடான 6.7 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைத்துள்ளது மூடிஸ் நிறுவனம்.

**10.சமீபத்தில் தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில், புதிய தேசிய சாதனையைப் படைத்த முன்னாள் உலக சாம்பியனான மீராபாய் சானு, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

அ. மணிப்பூர் ☑

ஆ. கேரளா

இ. கருநாடகம்

ஈ. தெலுங்கானா




- தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் 49 கி.கி., எடைப்பிரிவில் புதிய சாதனையுடன் தங்கம் வென்றார் முன்னாள் உலக சாம்பியன் மீராபாய் சானு. கொல்கத்தாவில் நடந்துவரும் இப்போட்டியில், பெண்கள் பிரிவில் மணிப்பூரைச்சேர்ந்த 25 வயது மீராபாய் சானு ஸ்நாட்ச் பிரிவில் 88 கிலோவும், ஜெர்க்கில் 115 கிலோ என மொத்தம் 203 கிலோவை தூக்கி தனது முந்தைய சாதனையைத்தகர்த்தார். கடந்த செப்டம்பரில் தாய்லாந்தில் நடந்த உலகப்போட்டியில் 201 கிலோ தூக்கியிருந்தார் மீராபாய் சானு.
- 25 வயதான மீராபாய் சானு, உலகத்தரவரிசையில் நான்காவது இடத்தில் உள்ளார். இந்தச் சாம்பியன்ஷிப்பில், ஆடவருக்கான 67 கிலோ பிரிவில் இந்தியாவின் ஜெர்மி லால்ரின்னுங்கா பட்டம் வென்றார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில், போர்டு நிறுவனத்தின் ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தை முதலமைச்சர் பழனிசாமி திறந்துவைத்தார்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் வெளியிடப்பட்ட சர்வதேச அறிவுசார் சொத்து குறியீடு–2020இல், இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

அ. 36

ஆ. 42

**இ. 40 ☑**

ஈ. 44

40

❖ US சேம்பர் ஆப் காமர்ஸ் சர்வதேச புத்தாக்கக் கொள்கை மையம், அண்மையில், சர்வதேச அறிவுசார் சொத்து குறியீட்டின் அண்மைய பதிப்பை வெளியிட்டது. இந்தப்பட்டியலில், 38.46% மதிப்பெண்ணுடன் இந்தியா 40ஆவது இடத்தில் உள்ளது. உலகெங்குமுள்ள 50 நாடுகளை தரவரிசைப்படுத்திய கடந்த ஆண்டு பட்டியலில், இந்தியா 36ஆவது இடத்தில் இருந்தது. இந்த ஆண்டு 53 நாடுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அமெரிக்கா, பிரிட்டன், சுவீடன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் தமது இடங்களைத் தக்கவைத்துக்கொண்டன.

**2. 20–விமான விதிகளை தள்ளுபடி செய்வதன்மூலம், இந்தியாவுக்கும் எந்நாட்டுக்கும் இடையே விமான சேவைகளைத்தொடங்க அலையன்ஸ் ஏர் நிறுவனத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?**

**அ. இலங்கை ☑**

ஆ. மொரீஷியஸ்

இ. தாய்லாந்து

ஈ. சிங்கப்பூர்



❖ இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே சர்வதேச பிரிவில் விமானங்களை இயக்க ஏர் இந்தியா நிறுவனத்தின் 100% மானியத்துடன் இயங்கும் அலையன்ஸ் ஏர் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கும் ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

❖ குறைந்தபட்சம் இருபது விமானங்களையோ அல்லது மொத்த பயணிகளைக் கையாளுவதில் இருபது சதவீதத்தையோ, உள்நாட்டு இயக்கத்தில் எது அதிகமோ அதை எட்டும் வகையில் இடைக்கால ஏற்பாடாக அலையன்ஸ் ஏர் நிறுவனத்திற்கு சிறப்பு பகிர்ந்தளிப்புக்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்புதலுக்கு முன்பாக பலாலி மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்களிலிருந்து வர்த்தக ரீதியில் விமானங்கள் இயக்கப்படவில்லை.

**3.எந்த ஆசிய நாட்டுக்கான புதிய குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தை பிரிட்டன் இளவரசர் சார்லஸ் அறிமுகப்படுத்தியுள்ளார்?**

அ. இலங்கை

**ஆ. இந்தியா ☑**

இ. வங்கதேசம்

ஈ. நேபாளம்



❖ பிரிட்டன் இளவரசர் சார்லஸ், சமீபத்தில், இந்தியாவுக்கான புதிய குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தை வெளியிட்டார். இந்த நிதியம், கடந்த 2007இல் அவரால் நிறுவப்பட்ட பிரிட்டிஷ் ஆசிய அறக்கட்டளை தொண்டு நிறுவனத்தின் ஒருபகுதியாகும்.

❖ தெற்காசியாவில் வறுமையை எதிர்த்துப்போராடுவதற்காக இந்த அறக்கட்டளை நிறுவப்பட்டது. இந்தப்புதிய நிதியத்தின் தூதராக, பிரபல அமெரிக்க பாடகர் கேட்டி பெர்ரி நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்து வரும் பத்தாண்டுகளில், இந்தியாவில், குழந்தைகள் வளர்ச்சுரண்டலை, 50 % அளவுக்கு குறைப்பதில் இந்தப் பாதுகாப்பு நிதியம் தனது கவனத்தைச்செலுத்தும்.

**4.உலகெங்கிலும் உள்ள மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக, அண்மையில், 'சர்வதேச மத சுதந்திரக் கூட்டணி'யை தொடங்கிய நாடு எது?**

அ. இரஷ்யா

ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

இ. ஜப்பான்

ஈ. இந்தியா




❖ உலகெங்கும் உள்ள மத சுதந்திரத்தை பாதுகாத்து பேணிக்காப்பதை நோக்கமாகக்கொண்ட சர்வதேச மத சுதந்திரக் கூட்டணியை, ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) அண்மையில் தொடங்கியது. USA வெளியுறவுத்துறை செயலர் மைக் பாம்பியோ, இதனை முறையாக தொடங்குவதாக அறிவித்தார்.

❖ இந்தக் கூட்டணியில் 27 நாடுகள் இணைந்துள்ளன; அவற்றுள் ஆஸ்திரேலியா, பிரேசில், UK, கிரீஸ் & நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகள் அடங்கும். மத சுதந்திரத்தின் முன்னேற்றத்திற்கான அடுத்த சந்திப்பு, வரும் ஜூலை மாதம் வார்சாவில் போலந்து நாட்டால் நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

**5.போலி செய்திகளை அடையாளமிட்டு அதன் தளத்தில் பகிரப்பட்ட தீங்கு விளைவிக்கும் தரவுகளை அகற்றுவதாக அண்மையில் அறிவித்த சமூக வலைத்தளம் எது?**

அ. வாட்ஸ் அப்

ஆ. டுவிட்டர் ☑

இ. இன்ஸ்டாகிராம்

ஈ. யூடியூப்

❖ அமெரிக்காவைச் சேர்ந்த சமூக வலைத்தளமான டுவிட்டர், அண்மையில் தனது தளத்தில் பகிரப்படும் போலி செய்திகளை அடையாளபடுத்தவுள்ளதாக அறிவித்தது. எதிர்வரும் மாதத்திலிருந்து இதற்கான பணிகள் தொடங்கும் என டுவிட்டர் நிறுவனம் கூறியுள்ளது.

❖ இதன்மூலம், அத்தளத்தில் பதிவுசெய்யப்படும் உள்ளடகங்களின் உண்மைத்தன்மை குறித்து அதன் பயனர்கள் அடையாளங்காணமுடியும். பொது பாதுகாப்புக்கு தீங்குவிளைவிக்கும் சில உள்ளடகங்கள் அகற்றப்படும் எனவும் டுவிட்டர் நிறுவனம் அறிவித்துள்ளது.

**6. அண்மைய அமைச்சரவை ஒப்புதலின்படி, இந்தியாவின் பதிமூன்றாவது மிகப்பெரிய துறைமுகம் அமைக்கப்படவுள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. மகாராஷ்டிரா ☑



- மகாராஷ்டிர மாநிலம் தகானுவுக்கு அருகே வதவான் என்னும் இடத்தில் முக்கிய துறைமுகம் ஒன்றை அமைப்பதற்காக கொள்கை அளவில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹65,544 கோடியாக இருக்கும். இந்தத்திட்டத்தை செயல்படுத்த சரிபாதி / அதற்குமேல் பங்குகளை கொண்ட முக்கிய பங்கேற்பு நிறுவனமாக ஜவஹர்லால் நேரு துறைமுகம் இருக்கும்.
- இதற்காக சிறப்பு நோக்க அமைப்பு ஒன்று உருவாக்கப்படும். அவ்வமைப்பு துறைமுகத்தின் உட்கட்ட –மைப்புகளை உருவாக்க உதவும். துறைமுகத்தின் அனைத்து விதமான வர்த்தக நடவடிக்கைகளும் பொதுத்துறை & தனியார் பங்களிப்புடன் நடைபெறும். இத்துறைமுகம் உருவாக்கப்படுவதால், உலகின் முன்னோடி சரக்குப்பெட்டகம் கையாளும் துறைமுகங்கள் பத்தில் இந்தியாவும் ஒன்றென திகழும்.

**7.அண்மையில், UNESCOஇடமிருந்து, 'உலக பாரம்பரிய தளம்' என முறையாக சான்றிதழ் பெற்ற இந்திய நகரம் எது?**

அ. வாரணாசி

ஆ. அகமதாபாத்

இ. ஜெய்ப்பூர் ☑

ஈ. நாக்பூர்



- இந்தியாவின் 'இளஞ்சிவப்பு நகரம் – Pink City' என அழைக்கப்படும் ஜெய்ப்பூர் நகரத்துக்கு UNESCOஇன் தலைமை இயக்குநர் ஆட்ரி அசௌலே 'உலக பாரம்பரிய தளத்துக்கான' முறையான சான்றிதழை வழங்கினார். ஜெய்ப்பூரின் வரலாற்று சிறப்புமிக்க ஆல்பர்ட் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டது.
- மேற்கு இராஜஸ்தான் மாநிலத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக இராஜஸ்தான் மாநில அரசின் சுற்றுலாத்துறையுடன் UNESCO இணைந்து இயங்கும் எனவும் அப்போது அறிவிக்கப்பட்டது. கடந்த 2019 ஜூலை மாதம் அஜர்பைஜானின் பாகு நகரத்தில் நடைபெற்ற UNESCO உலக பாரம்பரியக் குழுவின் 43ஆவது அமர்வில், ஜெய்ப்பூர், 'உலக பாரம்பரிய தளம்' என அறிவிக்கப்பட்டது.

**8.தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என்ற நிலையை, எத்தனை இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு (IIT) வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது?**

அ. 2 ஆ. 3

இ. 4 ஈ. 5 ☑

5

❖ ஐந்து முக்கிய இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு (IIIT) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் என்ற நிலையை வழங்குவதற்காக, இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IIIT) சட்டங்கள் (திருத்தம்) மசோதா–2020'க்கு மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது.

❖ பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டாண்மையில் சூரத், போபால், பாகல்பூர், அகர்தலா, ரைச்சூர் ஆகிய 5 இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சட்டப்பூர்வமான அந்தஸ்து வழங்கப்படவுள்ளன. அந்தஸ்து வழங்கப்பட்டபின்னர், இளநிலை தொழில்நுட்பம் (B.Tech) அல்லது முதுநிலை தொழில்நுட்பம் (M.Tech) அல்லது முனைவர் பட்டங்களை, பல்கலைக்கழகம் அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் வழங்குவதுபோல இந்த நிறுவனங்களால் வழங்கமுடியும். தற்போதுள்ள 15 இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஏற்கனவே இந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

**9.இஸ்ரேலின் எல்பிட் சிஸ்டம்ஸ், அண்மையில் ஓர் ஆளில்லா விமானத்தை உருவாக்குவதற்காக, எந்த இந்திய நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் ☑

ஆ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு

இ. பாரத் மின்னணு நிறுவனம்

ஈ. இந்திய விண்வெளி ஆய்வுமையம்

❖ நடந்துகொண்டிருக்கும் DefExpo–2020 கண்காட்சியின்போது, ஆளில்லா விமானத்தை உருவாக்குவ–தற்காக ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் மற்றும் இஸ்ரேலின் எல்பிட் சிஸ்டம்ஸ் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

❖ கடல்சார் & நிலஞ்சார் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆளில்லா விமானத்தை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை பகுப்பாய்வு செய்வதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

**10. Duff & Phelpsஇன் மதிப்புமிக்க மனிதர்கள் குறித்த அண்மைய ஆய்வில், முதலிடம் பிடித்த இந்தியர் யார்?**

அ. அக்ஷய் குமார்

ஆ. விராட் கோலி ☑

இ. PV சிந்து

ஈ. தீபிகா படுகோனே

❖ இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட்கோலி, இந்தியாவின் மதிப்புமிக்க மனிதர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். தொடர்ந்து மூன்றாவது முறையாக அவர் இப்பெருமையைப் பெறுகிறார். சர்வதேச ஆலோசனை நிறுவனமான Duff & Phelps, இந்தியாவின் மதிப்புமிக்க மனிதர்கள் பட்டியலை ஒவ்வோர் ஆண்டும் ஆய்வுசெய்து வெளியிட்டுவருகிறது.

❖ கடந்த 2019ஆம் ஆண்டில் விராட் கோலி தனது பிராண்ட் மதிப்பை 40% அதிகரித்து $237.5 மில்லியன் டாலராக உயர்த்தியுள்ளார் என அவ்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இந்தப் பட்டியலில் அக்ஷய் குமார் இரண்டாவது இடத்தையும், ரன்வீர் சிங் – தீபிகா படுகோனே மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர். இதில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் MS தோனி 9ஆவது இடத்தைப்பெற்றுள்ளார்.